பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 11 வியாழக்கிழமை (27-08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 273

# ஹமில்டன் பலாலிக்கு வந்து தளபதிகளோடு ஆராய்வு!

## நேற்று முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 27

ஸ்ரீலங்கா கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க முக்கிய பாதுகாப்பு அதிகாரிகள் சகிதம் நேற்று பலாலி இராணுவ முகாமுக்கு விஜயம் செய்தார். அங்கு முக்கிய மாநாடு ஒன்றை அவர் நடத்தினார்.

வடபகுதி பாதுகாப்பு நிலைவரம் குறித்து ஜெனரல் ஹமில்டன், வடபிராந்திய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவுடன் விரிவாக ஆராய்ந்தார் என அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது.

கூட்டுப்படைத் தளகர்த்தருடன் இராணுவ மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளும் நேற்றுப் பலாலிக்கு வந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற மாநாட்டின் முடிவுகள் குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை.

வடபகுதி இராணுவ நடவடிக்கைகள் குறித்து ஹமில்டன் அதிகாரிகளுடன் நீண்ட நேரம் கலந்தாலோசனை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காலக்கெடு

தெற்கு ஈராக்கில் உள்ள ஷியா முஸ்லிம்கள் மீதான ஈராக்கின் தாக்குதலை நிறுத்தக் கோரி அமெரிக்கா ஈராக்கிற்கு 24 மணி நேரக் காலக்கெடுவை நேற்று விதித்தது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை ஈராக் மீறுவதாக அமெரிக்காவும், ரஷ்யாவும், அமெரிக்காவின் வளைகுடா நட்பு நாடுகளும் ஈராக்கைக் குற்றஞ் சாட்டியுள்ளன. (இ)

### 'பூமியதிர்ச்சி' நடவடிக்கையில்

## படையினரிடம் சிக்கியோர் பட்டியல் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 27

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட 'பூமியதிர்ச்சி' இராணுவ நடவடிக்கைகளின் போது படையினரிடம் சிக்குண்டவர்களது அல்லது காணாமற் போனவர்களது பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் இராணுவ அதிகாரிகளிடம் கையளித்தனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாலிக்கு விஜயம் செய்த போது இந்தப் பட்டியல் கையளிக்கப்பட்டது.

இராணுவத்தினரின் பிடியில் சிக்குண்டவர்கள், மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பாக அவர்களது உறவினர்கள் செய்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த பெயர் விவரப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் படையினரிடம் சிக்குண்டோர் மற்றும் காணாமற்போனோர் தொடர்பாக படை அதிகாரிகளுடன் இவர்கள் பேச்சுவார்த்தையும் நடத்தி இருந்தனர். [இ-5]

## செஞ்சிலுவைக் குழு திரும்பியது

யாழ்ப்பாணம், ஆக. 27

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களை கவனிக்கவென கடந்த ஞாயிறன்று அங்கு விஜயம் செய்திருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் நேற்று யாழ். திரும்பினர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தங்கள் உறவினர்களுக்கு எழுதிய கடிதங்களை அவர்கள் தம்முடன் எடுத்து வந்துள்ளதாக அறியவந்தது. [உ-5]

## பக்தர் கூட்டம் அலைமோத நல்லூர்க் கந்தன் ரத பவனி!

யாழ்ப்பாணம், ஆக. 27

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் இரதோற்சவம் நேற்றுக் காலை ஆயிரக்கணக்கான அடியார்கள் மத்தியில் பக்தி பூர்வமாக நடைபெற்றது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து நேற்று அதிகாலை முதல் ஆயிரக் கணக்கில் அடியார்கள் ஆலயப் பகுதிக்கு வந்த வண்ணம் இருந்தனர்.

காலை 7 மணிக்கு சுவாமி தேர் ஏறி உலாவரும் காட்சிகாண அடியார்கள் கூட்டம் எங்கும் அலை மோதியதை காண முடிந்தது.

இம்முறை அதிக எண்ணிக்கையான அடியார்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் பொருட்டு காவடி, தூக்குக்காவடி எடுத்து வந்த காட்சியும் பக்திபூர்வமாக இருந்தது.

ஆலயச் சூழல் எங்கும் அடியார்கள் கூட்டம் நிறைந்து, அங்காங்கே சன நெரிசல் ஏற்பட்டது.

காவல் துறையினர் மற்றும் சாரணர்கள், தொண்டர்கள், சென்ஜோன் முதலுதவிப் பிரிவினர் ஆகியோர் ஒழுங்கு நடவடிக்கையில் முழுமூச்சாய் ஈடுபட்டனர். [உ-51-111-5-30]

## சுவர் இடிந்து விழுந்து பக்தர்கள் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 27

நேற்று நடைபெற்ற நல்லூர் கந்தசாமி கோயில் தேர்த் திருவிழாவின் போது சுவர் ஒன்று இடிந்து விழுந்ததால் 20 க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்களில் கடுமையான காயமுற்ற பத்துப் பேர் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மேலும் பத்துப்பேர் கோயிலின் மேற்கு வீதியில் அமைந்துள்ள தீவுப்பகுதி மக்களுக்கான சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றனர்.

நேற்றுக் காலை 7.15 மணியளவில் தேர் இழுக்க ஆரம்பித்த சமயம் இந்த விபத்து நிகழ்ந்தது.

கோவில் தெற்கு வீதியில் உள்ள நாவலர் மண்டபத்துக்கு முன்னால் உள்ள சுவரே இடிந்து விழுந்தது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## படையினரின் சூட்டுக்கு சில்லாலையில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 27

மாதகலில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சில்லாலைப் பகுதியில் இருவர் காயமடைந்தனர்.

சமீபத்தில் இராணுவ நடவடிக்கையின்போது கைவிட்டு வந்த பொருள்களை எடுத்து வரச் சென்றோரே காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 8 மணிக்கு இடம்பெற்ற சம்பவத்தில் பிரான்சிஸ்பிள்ளை மரியநாயகம் [வயது 54] என்பவர் காயம் அடைந்தார். இவர் தமது பொருள்களை எடுத்து வர வீட்டுக்குச் சென்றிருந்த போது துப்பாக்கி வேட்டுக்கு இலக்கானார்.

நேற்றுக் காலை 11.00 மணிக்கு இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் வடலியடைப்பைச் சேர்ந்த மனோகரன் சுதாகரன் [வயது 22] என்பவர் காயம் அடைந்தார்.

கடையில் இருந்த பொருள்களை ஏற்றிவர தனது நண்பனுக்கு உதவியாகச் சென்ற சமயம் இவர் காயம் அடைந்தார்.

காயம் அடைந்தவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [இ-68-15]

## எல்லைப்புற சிங்களவருக்கு துப்பாக்கி

யாழ்ப்பாணம், ஆக. 27

மட்டக்களப்பு, பொலனறுவை எல்லைப்புறங்களில் குடியேற்றப்பட்டுள்ள சிங்களவர்களுக்கு அரசு துப்பாக்கிகளை வழங்கிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குடியேற்றப்பட்டுள்ள சிங்களவர்கள் தமிழர்களது நிலங்களில் அத்துமீறி விவசாயம் செய்து வருகின்றனர் என்றும் —

அவர்களுக்கு அரசு பாதுகாப்பு வழங்கி வருவதாகவும் கூறப்படுகிறது. [இ-5]

### கிளர்ச்சியில் ஈடுபட்டதாக

## 4 இலங்கையர் உட்பட 32 பேர் மீது வழக்கு!

### சென்னையில் தாக்கல்

தமிழ் நாட்டில் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் எனக் குற்றஞ்சாட்டி 4 இலங்கையர் உட்பட 32 பேர் மீது சென்னை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு பொலிஸின் விசேட பிரிவு இந்த வழக்கைத் தாக்கல் செய்தது.

குற்றஞ் சாட்டப்பட்ட நான்கு இலங்கையர்களும் தமிழ்நாடு மீட்புப் படையை அமைக்க உதவினார்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மக்களைப் பீதியுறச் செய்யும் வகையில் அரச மற்றும் பொலீஸ் உயரதிகாரிகளைக் கொலை செய்ய இக்குழுவினர் திட்டமிட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

குற்றஞ் சாட்டப்பட்டுள்ள 28 இந்தியர்களில் 20 பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

## கிளிநொச்சியில் மிதிவெடி ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 27

சிலிப்பர் கட்டையைத் தூக்க முயன்ற போது அதன் கீழ் இருந்த மிதிவெடி வெடித்த சமயம் ஒருவர் கையில் காயம் அடைந்தார். அவரது இடது கையில் மூன்று விரல்கள் துண்டிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் கிளிநொச்சி ஆனந்தபுரம்ப் பகுதியில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லையா சந்திரன் [வயது 24] என்பவரே காயம் அடைந்தவர் ஆவார். காயம் அடைந்தவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [இ-15]

### இந்திய எல்லையில்

## பாக். ஹெலிக்கொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது

### பிரிகேடியர் ஜெனரலும் பலி

இந்திய எல்லையை ஊடுருவிய பாகிஸ்தானின் இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்றை இந்திய இராணுவம் சுட்டு வீழ்த்தியது என்றும் —

அப்போது அந்த ஹெலிக்கொப்டரில் இருந்த பாகிஸ்தான் பிரிகேடியர் ஜெனரல் கொல்லப்பட்டார் என்றும் —

இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர்கள் நிலைக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அவர் சொன்னார்.

### நிலாவெளியில் உள்ள

## ஜேர்மன் வானொலி நிலைய வாகனங்கள் கடத்தல்!

கொழும்பு, ஆக. 27

திருகோணமலை மாவட்டம் நிலாவெளியில் அமைந்துள்ள ஜேர்மன் வானொலி [டொச்சு வெலா] நிலையத்துக்குச் சொந்தமான இரு வாகனங்கள் கடத்திச்செல்லப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

ஆனால் இலங்கை விமானப் படை அந்த இரு வாகனங்களையும் கண்டுபிடித்து போர் விமானங்கள் மூலம் அவற்றை குண்டு வீசி அழித்து நிர்மூலமாக்கியது என்று இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● 40 ஆயிரம் பேர் ஒரே சமயத்தில் திருமணம்!

சோல், ஆக. 27

தென்கொரியாவில் நேற்று முன்தினம் 131 நாடுகளைச் சேர்ந்த 40 ஆயிரம் பேர் ஒரே சமயத்தில் திருமணம் செய்து கொண்டனர்.

இதுவே உலகின் மிகப் பெரிய கூட்டுத் திருமணமாகக் கருதப்படுகிறது.

மேலும் 20 ஆயிரம் பேர் செய்மதியூடாகத் தமது

[6 ஆம் பக்கம் பார்க்க]


*English Assistant Teachers*

செப்ரெம்பர் மாத இறுதியில் நடைபெற இருக்கும் போட்டிப் பரீட்சைக்கான

**துரித பயிற்சி வகுப்புகள்**

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்

ஆரம்பம்: 29-08-92

**Lectures by M. S. Sabanayagam**

Full course Fees: 250/-

மேலதிக விவரங்கட்கு:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3rd Cross Street,
Jaffna.

[C / 3088]



**பாரதிதாசன் கல்வி நிறுவனம்**

**BECON Study Centre**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 93 DAY CLASSES**

(ஒரு வருட வகுப்பு)

பொருளியல்: வரதராஜன்
(8 00 — 9-30)

கணக்கியல்: சௌந்தி
(9-30 — 11-00)

வர்த்தகம்: பசில்
(11-00 — 12-00)

அளவையியல்: பிரபானந்தன்
(12-00 — 1-00)

தமிழ்: அமரசிவம்
9-30 — 11-00)

இந்துநாகரிகம்: அமரசிவம்
(1-00 — 2-00)

**ஆரம்பம்: 01-09-1992**
செவ்வாய் 8-00 a m

[சி-3087]


## நல்லூரில் இன்று

கொழும்புத்துறை, ஆக. 27

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் 25ஆம் திருவிழாவான இன்று வியாழக்கிழமை காலை 7-00 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ மாலை மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் "தெய்வயானை அம்மை" என்ற பொருளில் கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2-00 மணிக்கு கந்தப் புராணப் படிப்பு. பிற்பகல் 3-00 மணிக்கு பௌராணிகர் மு. தியாகராசாவின் "முருக இலக்கியங்கள்" தொடர் விரிவுரை.

★ நல்லூர் கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் எஸ். கணபதிப்பிள்ளையின் இன்னிசைக்கச்சேரி.

★ யாழோசையின் ஆதரவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை 6-35 மணி தொடக்கம் — கீழைத்தேச இசைவிழா.

[இ-30]

## இன்று

யாழ்ப்பாணம், ஆக. 27

யாழ். றோட்டறிக் கழகம் இன்று மாலை 4. 30 மணிக்கு ஞானம்ஸ் ஹோட்டலில் நடத்தும் கௌரவ பேச்சாளர் தின நிகழ்ச்சியில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் "ஜப்பானிய சமூக பண்பாட்டமைப்பு" என்ற பொருளில் உரை நிகழ்த்துவார்.

[ஒ]

## நாய்களுக்கு தடுப்பூசி

தெல்லிப்பழை, ஆக. 27

வளர்ப்பு நாய்களுக்கு நோய்த் தடுப்பு ஊசி ஏற்றும் வேலைகள் உடுவில் சுகாதார அதிகாரி பிரிவில் இன்று வியாழக்கிழமையும் தொடர்ந்து நடைபெறும்.

இன்று காலை 9.00 மணி முதல் 11 00 மணி வரை சங்குவேலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும்—

முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 1 00 மணி வரை சங்குவேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும்—

பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை அந்தியானி தம்பழை சன சமூக நிலையத்திலும் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும்.

[இ-68]

## சிங்கள, முஸ்லிம் கிராமங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உள்ள சிங்கள, முஸ்லிம் கிராமங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

கிழக்கு பிராந்தியத் தளபதியான பிரிகேடியர் லக்ஷ்மன் அல்கம மட்டக்களப்பில் உயர் அதிகாரிகளின் மாநாடு ஒன்றைக் கூட்டி, விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைத் தடுக்கும் மாற்று நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தார் என்றும் —

அம்மாநாட்டை அடுத்தே சிங்கள, முஸ்லிம் கிராமங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-எ)

## ஓராண்டு நினைவஞ்சலி



| விஜனனம்: | | வீரமரணம்: |
|---|---|---|
| 02 | | 08 |
| — | | — |
| 05 | | 09 |
| — | | — |
| 1975 | | 1991 |

### வீரவேங்கை பரிமளா

கந்தசாமி சந்திரபவானி [ஈசா]

திதி: 27-08-1992

நல்லதோர் மகளாய், நலன் விரும்பும் சோதரியாய், மெல்ல நீ வாழ்ந்திருந்தாய்! அன்பான உன் வடிவம், ஆதரவாம் உன் சொற்கள், என்றென்றும் எம் நெஞ்சில் நீங்காது நிலைத்து நிற்கும்! இனிய உந்தன் குரல் இன்னமும் எம் காதில் கனிந்த பழச்சாறாய் கனிவோடு ஒலிக்குதம்மா! ஈசா என்றவுடன், உடன் வந்த நீயில்லா எம் இல்லம் நாதமில்லா வீணையாய் நலிவுற்று உளறுதம்மா! ஈசா நீ எம்மை விட்டு ஈசன் பாதம் சேர்ந்துவிட்டாய், மறைந்த உன் மலர்ப்பாதம் தொழ நாமும் வந்திட்டோம் என்றென்றும்.

உன் ஆத்மா சாந்தியும் எய்திடவே இறைஞ்சுகின்றோம் ஈசன் பாதம்.


இவருடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட லெப்டினன் குணசீலியையும் நினைவுகூருகின்றோம்.

- குடும்பத்தினர்.

22/5, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(22318)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் பிறப்பு: | | விண்ணில் கலப்பு: |
|---|---|---|
| 08 | | 28 |
| — | | — |
| 10 | | 07 |
| — | | — |
| 1922 | | 1992 |

### அமரர் குமாரசாமி வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற மாவட்டக் காணி உத்தியோகத்தர் D.L.O)

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
மின்னல் சிரிப்புடனும் மேனிப் பொலிவுடனும்
அறிவூட்டி வழிகாட்டி குடும்பக் குலவிளக்காய்
பாசமாய் பழகிவிட்டு பாதியில் பிரிந்தீர்கள்
விண்ணிற்கு
விண்ணுலகை அலங்கரிக்கும் எங்கள் தெய்வம்
அமலனடி சேர்ந்தீர்கள் ஆறுமோ எமது சோகம் தீ

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

[22319]

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஆங்கிரச வருடம் ஆவணித் திங்கள் 13 ஆம் நாள் (1992 - 08 - 29) சனிக்கிழமை நண்பகல் 1-20 மணி முதல் 2-12 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில்

திரு. திருமதி K. சிவசுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வன்
செல்வன்
**ஸ்ரீகுமாரன்**
[தொழில்நுட்பவியலாளர், சிமெந்து கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை]
அவர்களுக்கும்

எமது புதல்வி
செல்வி
**யசோதா**
[ஆசிரியை, சென். ஆன்ஸ் பாடசாலை மானிப்பாய்]
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் மணவாளக் கோலம் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

★ தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. திருமதி S மன்மதராஜன்,
(கண்காணவர் புனர்வாழ்வு புனரமைப்பு செயலகம் முல்லைத்தீவு)
"நிதி இல்லம்",
மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

திரு திருமதி V. N. செல்வராஜா,
(இசைக்கலைஞர்)
சிரஸ்ரீச் சந்தி,
சண்டிலிப்பாய்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில், மானிப்பாய், சண்டிலிப்பாய்

# அகதி முகாம்களில் இடநெருக்கடி; தொற்றுநோய் பரவும் ஆபத்து!

உடுவில், ஆக. 27

உடுவில், மானிப்பாய், நவாலி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் இட நெருக்கடி காரணமாக சுகாதார சீர்கேடுகளை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் தொற்றுநோய்கள் பரவக்கூடிய ஆபத்து தோன்றியுள்ளது.

உடுத்த உடையுடன் வெளியேறி வந்த மக்கள் எவ்வித சுகாதார வசதிகளும் அற்ற நிலையில் முகாம்களில் தங்கி உள்ளனர்.

இவர்கள் தங்கியுள்ள முகாம்களில் போதியளவு குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகள் இல்லை எனக் கூறப்படுகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் மற்றும் சுகாதார சேவைப் பகுதியினர் ஓரளவு வசதிகளைச் செய்து உதவி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-152)

## மூன்று உ.அ.அதிபர் பிரிவுகளில் 15 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து விட்டன!

யாழ்ப்பாணம், ஆக. 27

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட "பூமி அதிர்ச்சி" இராணுவ நடவடிக்கையின் போது சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து 15 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் — இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பகுதிகளில் இருந்து திரட்டிய தகவல்களின் பின்னர் — திங்கட்கிழமை வெளியிட்ட புள்ளிவிவர அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலக புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் புனர்வாழ்வுப் பிரிவுக் குழுவினரும், மற்றும் சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்களும் கடந்த சனி, ஞாயிறு இரு தினங்களும் பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் தங்கியுள்ள இடங்களுக்கு நேரில் விஜயம் செய்தனர்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்து 884 குடும்பங்களைக் கொண்ட 6 ஆயிரத்து 522 பேர் மொத்தம் 13 முகாம்களில் தங்கியுள்ளனர். (ஓ-5-152)

## புலிகளுக்கு பணம் வழங்க ஜெயலலிதா இணக்கம்

### இப்படிச் சொல்கிறார் சுவாமி

சென்னை, ஆக. 27

தனது பாதுகாப்புக்காக விடுதலைப் புலிகளுக்கு 'பாதுகாப்புப் பணம்' வழங்க தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இணங்கியுள்ளார்.

ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி இவ்வாறு தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் தூதுவர்கள் பாரிஸிலும், சிங்கப்பூரிலும் உள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, முதலமைச்சரின் சொந்தப் பாதுகாப்புக்காக பணம் வழங்க இணக்கம் தெரிவித்தனர் என்றும் அவர் சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது தெரிவித்தார். (ஓ-த)

### மறுப்பு

சென்னை, ஆக. 27

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளை லண்டனிலும், பாரிஸிலும் அ.தி.மு.க. பிரதிநிதிகள் சந்தித்தனர் என்று ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்த குற்றச்சாட்டை முதலமைச்சர் ஜெயலலிதா மறுத்துள்ளார். (ஓ-எ)

## ரிட்மனு தள்ளுபடி

கொழும்பு, ஆக. 27

சந்தனமஹோட்டல் திட்டம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ரிட்மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

மனுதாரர் மனுவை வாபஸ் பெற்றதனால். செலவுத் தொகையின்றி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

சந்தனம ஹோட்டல் கட்டப்படும் காணியை ஹோட்டல் கட்டும் நிறுவனத்துக்கு கையளித்ததை ஆட்சேபித்து, சூழல் பாதுகாப்பு ஸ்தாபனம் ஒன்று இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தது. (த)

## பல்கலைக்கழக பட்டமளிப்புவிழா

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்கான பட்டமளிப்புவிழா அடுத்த மாதம் ஐந்தாம் திகதி காலை பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

பட்டமளிப்பு விழாவை தொடர்ந்து இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் ஆதரவில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

ஆறாம் திகதி காலை முதல் கைலாசபதி கலை அரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் ஏற்பாடாகி உள்ளது.

## அகதிமுகாம் கொட்டகை எரிந்து நாசம்

மன்னாரில் அகதிகள் தங்கியுள்ள "சனி வவேஜ்" அகதி முகாமில் பாரிய கொட்டகை ஒன்று ஞாயிறு இரவு மர்மமான முறையில் எரிந்து சாம்பரானதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

## குடாநாட்டில் மேலும் சில பொலீஸ் நிலையங்கள்!

### அமைப்பதற்கு முடிவாம்

கொழும்பு, ஆக. 27

யாழ் குடாவில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மேலும் சில பொலீஸ் நிலையங்கள் வெகு விரைவில் திறக்கப்படும் என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

எந்தெந்த இடங்களில் பொலீஸ் நிலையங்களைத் திறப்பது என்பதை ஆராய உயர்மட்ட பொலீஸ் குழு ஒன்று நேற்று பலாலி செல்ல இருந்ததாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வடபகுதியில் தற்போது கைப்பற்றப்பட்ட இடங்களில் பொலீஸ் நிலையங்கள் இல்லை. அங்கு சிவில் நிர்வாகத்தை நடத்த வசதியாக, உடனடியாக சில பொலீஸ் நிலையங்களை ஆரம்பிக்க வேண்டும் என அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளது என்றும் —

அதை அடுத்து வட பிராந்திய பொலீஸ் மா அதிபர் ஏ. ஈ. ஆனந்தராஜா, யாழ். பொலீஸ் அத்தியட்சகர் ஜெயராஜன், வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா உட்பட உயர் அதிகாரிகள் நேற்று பலாலி செல்ல இருந்தனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஓ-த)

## முருகன் தமிழ் அர்ச்சனை மலர்

தேர்த்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் கோவில் வாசலில் அமைந்திருக்கும் அண்ணா தொழிலகத்தாரின் விளம்பர நிலையத்தில் அண்ணா உற்பத்திப் பொருள்களை வாங்கி முருகன் அர்ச்சனை மலரை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**அண்ணா தொழிலகம்,**
இணுவில் தெற்கு, இணுவில்.

(சி/3084)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 04 — 1924

மறைவு: 27 — 08 — 1987

**அமரர் அ. தம்பிராசா**
(திருநகர்)

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்; நெஞ்சம் மறவாத நினைவுகளுடன் உங்கள்,

அன்பு மனைவி. மக்கள், மருமக்கள்; பேரப்பிள்ளைகள்.

இராசலிங்கம் வீதி. [22303]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 24 — 07 — 1947

அரக்கர் பிடியில்: 20 — 08 — 1990

அமரர்

**சோ. கந்தையா இரவீந்திரன்**
(வேலணை)
(ஆசிரியர், வைத்தீஸ்வரா வித்தியாலயம்)

திதி: 27 08-1992

அன்பினால், பண்பினால், அயராத சேவையினால் இன்சொல்லால் அனைவரையும் ஆட்கொண்ட சுந்தரத் தெய்வமே! உயிர்க்குயிரே! உம் பிரிவால் உளம் நெகிழ்ந்து வருந்துகிறோம்.

உமது ஆன்ம சாந்திக்காக இறைவனை என்றும் இறைஞ்சும்;

மனைவி, மக்கள், பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

82/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (22316)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருடம் ஆவணி மாதம் 14ஆம் நாள் (30-08-1992) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7-21 முதல் 9-07 மணிவரை ★ வரும் கன்னிலக்கின சுபமுகூர்த்த வேளையில் ★

| | | |
|---|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **அப்புத்துரை சுந்தரலிங்கம்** (சுந்தர்) (யாழ். பல்கலைக்கழகம்) அவர்களுக்கும் | | எமது ஏக புத்திரி திருநிறை செல்வி **தில்லையம்பலம் யசோதா** (யசோ) (ஆசிரியை, ஆசிரிய கலாசாலை, கோப்பாய்) அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற இருப்பதால், அவ்விழாவில் குடும்ப சகிதம் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அனைவரையும் ★ அன்புடன் அழைக்கின்றோம். ★

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்;

திருமதி செ. அப்புத்துரை,
சகோதரர், சகோதரிகள்,
நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

திருமதி அ. தில்லையம்பலம்,
திரு. திருமதி சிவகுமார்,
அன்பகம்,
[illegible]

[5271] (இரு வீட்டார் அழைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தேவை

மருந்தகத்தில் பார்மஸிஸ்ட் மூலம் தொழில் பழக விரும்புவோர் 30-08-92 நேரில் வரவும். ''வெஸ்கோ'' 470 [250] ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்: [O. P. D. முன்பாக] (5274)

## புலமைப்பரிசில் பரீட்சை

23-08-1992 அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆண்டு-5 [புலமைப் பரிசில்] பரீட்சை வினாத்தாள்கள் - விடைகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes. 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-3162]

## எழுதுநர் பரீட்சை

எழுதுநர் போட்டிப் பரீட்சைத் தகுதித் தேர்வுக்கான மாதிரி வினாத்தாள் [பொது விவேகப் பயிற்சிகள்] 10-9-92 வெளிவருகின்றது. ஆக்கம்: க. குணராஜா. எல்லாப் புத்தகசாலைகளிலும். கிடைக்கும். [22308]

## குரக்கன் கொள்வனவு

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்குமுகமாக, விவசாயிகளிடம் இருந்து குரக்கனை கொள்வனவு செய்யத் தொடங்கியுள்ளது.

ஒரு கிலோ 26 ரூபா வீதம் கொள்முதல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## நெல்லுடன் சென்ற தாலி ஆலையில் மீட்பு!

முதல் நாள் இரவு அவித்த நெல்லுக்குள் [புளுங்கல்] மறைத்து வைக்கப்பட்ட ரூபா 75 ஆயிரம் பெறுமதியான 15 பவுண் தாலிக்கொடி அடுத்தநாள் தவறுதலாக நெல்லுடன் நெல்குற்றும் ஆலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சம்பவம் அண்மையில் மட்டுவில் வடக்கு மானாவளைப் பகுதியில் இடம் பெற்றது.

காவல்துறையினர் விசாரணை நடத்தி ஆலையில் இருந்த தாலிக்கொடியை மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்தனர்.

பிரஸ்தாப பெண் தமது தாலிக்கொடியை பாதுகாப்புக் கருதி இரவு அவித்த நெல்லுக்குள் மறைத்து வைத்திருந்தார் என்றும்—

அடுத்தநாள் நெல்லுக்குற்றும் ஆலைக்கு நெல் எடுத்துச் செல்லப்பட்ட சமயம், தாலிக்கொடியும் தவறுதலாக எடுத்துச் செல்லப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆலையில் இருந்து அரிசி வீட்டுக்குக் கொண்டுவரப்பட்ட பின்பே முதல் நாள் இரவு நெல்லுக்குள் தாலிக்கொடியை மறைத்து வைத்த விடயம் தெரிவிக்கப்பட்டதாம்.

உடனடியாக காவல் துறையினரின் உதவி நாடப்பட்டு ஆலையில் இருந்து தாலிக்கொடி மீட்கப்பட்டதாம்.


நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

A/L 94

தூய கணிதம் — இருபடிச் சமன்பாடுகள்
பிரயோககணிதம் — ஒரு தள விசைகள்

ஆசிரியர்: திரு. கமலசிங்கம்

ஆரம்பம்: 01-09-1992

[சி-3161]


## முதலாம் ஆண்டு நினைவு

### திருமதி செல்வவதனி சசிதரன்

[வதனா]

மலர்வு: 10-10-1961 உதிர்வு: 08-09-1991

திதி: 27 — 08 — 1992

பாசமுடன் எமை அணைத்து
பரிவோடு காத்த அம்மா!
நேசமுடன் உனை நாங்கள்
நினைக்காத நேரமில்லை.

கணவன். பிள்ளைகள்-
சசிக்காந், சசினா, சசிறா.

33/4, கலைமகள் வீதி,
அரியாலை.

(22313)

## நன்றி தெரிவிக்கும் ஆராதனை



இம்மைக்குள்: 18 — 10 — 1911

மறுமைக்குள்: 20 — 06 — 1992

அமரர்

### ஜே. ஜீ. அரசரத்தினம்

காலஞ்சென்ற நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின், முன்னாள் அதிபர் திரு. ஜே. ஜீ. அரசரத்தினம் அவர்களின் வாழ்க்கைக்கும், சேவைக்கும் நன்றி தெரிவிக்கும் ஆராதனை நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் 29-08-1992 சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு நடைபெறும். இவ்வாராதனையில் அவரின் பழைய மாணவர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோர்களைக் கலந்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

வை. எம். சி. ஏ.,
யாழ்ப்பாணம்.

(சி-3086)

## இரண்டாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



மண்ணில்: 18 — 06 — 1933

விண்ணில்: 20 — 08 — 1990

தோலகட்டி - வயாவிளான்

அமரர்

### வைத்திலிங்கம் நடராசா

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி - அச்சுவேலி)

திதி: 27 — 08 — 1992

எங்கள் அன்பு அப்பாவே!

எங்கள் வாழ்க்கைப் பாதையின் முன்னே வழிகாட்டி நடந்து கொண்டு, எத்தனையோ மேடுகள், பள்ளங்கள் நிறைந்த பாதையை வெற்றியுடன் கடக்கச் செய்து, சீரான பாதையில் நடக்க ஆரம்பிக்கையில், இடைவழியில் எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றாலும், உங்களின் ''கனவுக் கோட்டைகளை'' நோக்கி வெற்றியுடன் நடந்து செல்லும் வழியில், உங்களின் பாச மர நிழலின் கீழே நின்று, நின்று ஓய்வெடுத்துக் கொண்டு செல்லும் நாங்கள், நீங்கள் மறைந்த இடத்தில் இருந்து இரண்டாவது மைல் கல்லடியில் நின்று கொண்டு, கண்ணீர் பூக்களினால் உங்களின் காலடியில் அர்ச்சித்துப் பிரார்த்தித்து கண்ணீர் அஞ்சலி கூறுகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கும்;

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன் (பிரான்ஸ்).

தோலகட்டி ஒழுங்கை,
வயாவிளான்.

(22[illegible])

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



சரவணையூர் பிரபல வர்த்தகர்

அமரர்

### ஆறுமுகம் தியாகராசா

(சோதி)

மலர்வு: 28 — 02 — 1944 உதிர்வு: 20 — 08 — 1990

திதி: 27 — 08 — 1992

ஐம்பதிலே நான்குகுறை ஆண்டு இப்புவியில் வாழ்ந்தே
நாம் பெறும் அனைத்தும் நாடித்தேடித் தந்த -
எந்தையே!
எம் சுற்றம் எல்லாம் உயர்ந்திடவே உவந்துழைத்து
கைம்மாறு கருதாத் தொண்டனாய் வாழ்ந்தீர்;
தான் பிறந்த தாய்நாடு சரவணையில்
தானம், வேள்வி, தவம், கல்வியாவும் - தழைத்திடவே
தந்தையே எந்நாளும் இத்தரணியில் பாடுபட்டு
கந்தன் தீர்த்தத்தில், பரவையில் அவன் பதம் பற்றினீர்.
ஆண்டிரண்டு சென்றதையா அருகினில் நீயிருந்து
விண்கண்ட தெய்வத்திருவடியில் வாழ்கின்ற - எங்கள்
கண்கண்ட தெய்வமே! கண்ணின் கருமணியே!!
மண்மிசை இருந்தே மலர் அஞ்சலி செய்கிறோம்.

சாந்தி!

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர், மாமன், மாமி,
மைத்துனர், மைத்துனிமார்,
உறவினர்கள்.

காரைக்காடு,
கோண்டாவில் கிழக்கு,
இணுவில்.

[22317]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 10 — 03 — 1913

உதிர்வு: 23 — 07 — 1992

அமரர்

### திரு. கா. கந்தையாபிள்ளை சிவசிதம்பரம்

[நயினாதீவு]

அந்தியேட்டி: 27—08—1992

நயினாதீவு, முன்னாள் கிராம விதானையாரும், ஆசிரியரும், நயினாதீவுக் கிராம சபையின் 1ஆம் வட்டார முன்னாள் உறுப்பினரும், நயினாதீவு இணக்க சபையின் முன்னாள் தலைவரும் - சமாதான நீதிவானும், புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.ச. முன்னாள் நெறியாளரும், நயினாதீவு ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவில் தர்மகர்த்தா சபையின் முன்னாள் தலைவரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தர்மகர்த்தா சபையின் முன்னாள் பொருளாளரும், ''அமுதசுரபி'' அன்னதான சபையின் ஆரம்பகால உறுப்பினரும், இறுதிக் காலத்தில் உப தலைவருமாக இருந்து சேவை செய்தவரும்,

நயினாதீவு, காலஞ்சென்ற கா.கந்தையாபிள்ளை-பார்வதிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற இ. வீரவாகு சின்னம்மாவின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், ஆகிய எங்கள் குடும்பத் தலைவரின் ஈமக்கிரியைகள், தகனக் கிரியைகள் நயினாதீவில் நடைபெற்ற போது நேரில் கலந்து கொண்டு, உதவிகள் புரிந்த, யாழ்ப்பாணம் - கந்தர்மடம் இல்லத்திற்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்த நயினாதீவு, யாழ்ப்பாணம் வாழ் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

4ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

[சி-3085]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## இடம்பெயர்ந்தோர் அவல நிலை

கடந்த வாரம் வலிகாமம்-வடக்கு, வலிகாமம் மேற்குப் பிரதேசங்களில் நடந்த இராணுவ நடவடிக்கைகளால் சுமார் ஒரு லட்சம் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். குடாநாட்டின் நான்கு உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள 45 முகாம்களில் 20 ஆயிரம் குடும்பங்கள் தங்கியுள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் போதிய உணவு மற்றும் சுகாதார வசதிகள் இன்றி அவதியுறுகின்றனர்.

கடந்த இரண்டே கால் வருடங்களாகத் தமிழ்ப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன. அதனால் மக்கள் பாதிக்கப்படுவதும், இடம்பெயர்வதும் தொடர் நிகழ்வுகளாக மாறிவிட்டன. இதனைத் தக்கபடி உணர்ந்து தொண்டர் நிறுவனங்கள் நிவாரண மற்றும் புனர்வாழ்வு உதவிகளை ஒன்றிணைத்துத் திட்டமிட்ட அடிப்படையில் செய்து வருகின்றன.

எனினும், ஒரே வேளையில் பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயரும்போது, அகதிகளாக மாறும்போது அவர்களுக்குரிய உணவு மற்றும் சுகாதார வசதிகளைச் செய்வது பெரும் கஷ்டமான பணியே. இடம்பெயரும் மக்களுக்கு உடனடி - அவசர - உதவிகளைச் செய்யக்கூடியதான நெருக்கடிகால அவசர நடவடிக்கைத் திட்டங்களை வகுத்து அவற்றை செயற்படுத்தக்கூடிய தயார் நிலையில் இருக்க வேண்டியது அவசியம். நெருக்கடி கால அவசர நடவடிக்கைத் திட்டங்களை வகுப்பினும் அவற்றை செயற்படுத்தத் தேவைப்படும் வளங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கலாம்.

தமிழ் மக்களை வேண்டுமென்றே பாதிப்புறச் செய்யும்— இடம்பெயரச் செய்யும்— அரசாங்கம் அவர்களுக்கு உதவும் என்று எதிர்பார்க்க முடியாது. தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடையை விதித்து அவர்களைத் தண்டிக்க நினைக்கும் அரசு இடம்பெயரும் தமிழர்களுக்குத் தாராளமாக உதவும் என்று நம்பியிருக்க முடியாது.

எனவே தமிழ்ப் பகுதிகளில் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவும் பெரும் பொறுப்பு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களையே சாருகிறது.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு போதிய அளவில் தானும் உதவாமல், மனிதாபிமானத்தின் பால் உதவ முன்வருகின்ற வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களுக்கு பலவிதமான முட்டுக்கட்டைகளைப் போடவும் அரசு முனைந்துள்ளது தெரிந்ததே. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் வழங்கும் நன்கொடைகளில் பெரும்பகுதியை தென்பகுதித் தேவைகளுக்கு வழிமாற்றுவதிலும் அரசு கபடத்துடன் செயற்படுகிறது.

எனவே வடக்கு-கிழக்கில் இயங்கும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் தத்தமது தலைமை அலுவலகங்களுக்கு இவற்றை விளக்கி உதவிகளை நேரடியாகப் பெற முயற்சிக்க வேண்டும்: அவசர நடவடிக்கைக்குத் தேவைப்படும் வளங்களைத் திரட்டித் தேக்கிவைக்க வகை செய்ய வேண்டும்.

வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் நேரடியாக உதவ அரசு தடை விதிக்குமானால் அரசு தமிழர்களை இராணுவ நடவடிக்கை மூலம் மட்டுமன்றி, மனிதநேயமே சிறிதுமின்றிப் பட்டினி போட்டுச் சாகடிக்கவும் திட்டமிட்டிருக்கிறது என்பது உலகத்துக்கு இலகுவில் தெரியவரும்.

போசாக்கு நிலையில் பாதிப்புற்ற

## கர்ப்பிணித் தாய்மாருக்கு ஐ.நா.சிறுவர் நிதியம் உதவும்

யாழ்ப்பாணம், ஆக. 27

போசாக்கு நிலையில் பாதிக்கப்பட்ட குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உதவ ஐ நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

இராணுவ நடவடிக்கையால் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் போசாக்கு நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் —

நலிவுற்ற சமுதாயம் ஒன்று உருவாகும் அபாய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் — யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டர் நிறுவனங்கள் புள்ளி விவரங்களுடன் ஐ நா சிறுவர் பாதுகாப்பு நிதியத்துக்கு அறிக்கைகளை அனுப்பியிருந்தன. [ஒ-3]

## மட்டக்களப்பு அகதிகள் இடம்பெயரும் அவல நிலை

மட்டக்களப்பு, ஆக. 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினால் எழுந்துள்ள குடிதண்ணீர் பிரச்சினையை அடுத்து, அகதி முகாம்களில் இருந்த மக்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயரும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரட்சியால் அதிகம் பாதிக்கப்படாத வாகரைச்சேனை, வாகரை ஆகிய இடங்களை நோக்கி அவர்கள் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் —

அப்பகுதிகள் இராணுவ கெடுபிடிகள் கூடிய இடங்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [த-5]

## வன்னியில் திலீபன் நினைவு இலக்கிய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஆக. 27

லெப். கேர்ணல் திலீபனது தியாக மரணத்தின் 5ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் செப்டம்பர் 18ஆம் திகதி அன்று வன்னி மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் வன்னி மாவட்டப் பாடசாலைகள் இடையே இலக்கிய அறிவுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்ற நான்கு பிரிவுகளாக பேச்சு, கவிதை, கட்டுரை என்ற மூன்று விடயங்களில் இந்தப் போட்டி நடத்தப்படும்.

பாடசாலைகளில் நடைபெறும் லெப். கேர்ணல் திலீபன் ஞாபகார்த்த அஞ்சலிக் கூட்டங்களின் போது இப்போட்டிகளில் வெற்றிபெறுவோருக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். (இ)

## செய்திச் சரம்

### தட கள பயிற்சி முகாம்

வடமராட்சி, ஆக. 27

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று காலை 8 மணிக்கு தடகள பயிற்சி முகாம் ஒன்று நடைபெறும். [த-165]

### குளங்கள் புனரமைப்பு

வடமராட்சி, ஆக. 27

வடமராட்சி கப்பூது கிராமத்தில் தூர்ந்துபோன ஐந்து குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

மூன்று குளங்கள் போரூட் நிறுவனத்தாலும் இரண்டு குளங்கள் சிரமதானப் பணி மூலமும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. [ஒ-165]

### கந்தளாயில் மண் சரிவில் சிக்கி இருவர் மரணம்

கொழும்பு, ஆக. 27

கந்தளாயில் ஹோட்டல் கட்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த தொழிலாளர்களில் இருவர் அங்கு இடம்பெற்ற மண் சரிவு ஒன்றில் அகப்பட்டு இறந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கிடங்கு ஒன்றில் மண் வெட்டுவதில் அவர்கள் ஈடுபட்டிருந்த போதே மண்சரிவு ஏற்பட்டது என்றும் இச்சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [த]

### நினைவஞ்சலி கூட்டம்

ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதல்களில் வீரமரணமடைந்த தென்மராட்சியைச் சேர்ந்த கப்டன் தும்பன் மற்றும் வீரவேங்கைகள் இன்பன், மூப்பனார், மாறன், பாருதி, அனிபா, கண்ணன், கமலன் ஆகிய எட்டு மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த புதன்கிழமை இரவு பெரிய மாவடி சித்தி விநாயகர் கலைமன்ற அரங்கில் நடைபெற்றது.

சாவகச்சேரி வட்டவைப் பொறுப்பாளர் திரு. கோபால் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் இம் மாவீரர்களின் குடும்பத்தினர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

### கதிர்காமத்தில் கடும் வரட்சி

கொழும்பு, ஆக. 27

கதிர்காமம் பகுதியில் மிக மோசமான வரட்சி நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது.

குளிப்பதற்கோ, குடிப்பதற்கோ தண்ணீரின்றி மக்கள் அவஸ்தைப்படுகின்றனர்.

மாணிக்க கங்கை வற்றி வரண்டு வெறும் மணல் பாலைவனமாகக் காட்சியளிக்கின்றது. [த]

### கரவெட்டியில் அஞ்சலிக் கூட்டம்

வடமராட்சி, ஆக. 27

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலம் முதல், கரவெட்டி வட்ட அவைப் பகுதியில் ஆடி, ஆவணி மாதங்களில் வீரமரணமடைந்த மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக்கூட்டம் இன்று கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியில் நடைபெறும்.

# சிறுவர்களைத் தாக்கும் வாதக்காய்ச்சல் நோய்

## இருதயப் பாதிப்பு மரணத்தை ஏற்படுத்தலாம்

சமீபத்தில் யாழ். மருதனார்மடம் மண்டபத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம். யோகவிநாயகம் 'வாதக் காய்ச்சல்' நோய் பற்றி உரை நிகழ்த்தினார் அவரது உரையின் ஒருபகுதி கீழே தொகுத்துத் தரப்படுகிறது.

வாதக் காய்ச்சல் Rheumatic Fever) பாடசாலை மாணவர்கள் மத்தியிலேயே அதிகமாகக் காணப்படுகிறது.

பொருளாதாரம் குறைந்த, போஷாக்கு குறைபாடுள்ள, அடிப்படைச் சுகாதார வசதிகள் அற்ற பகுதிகளிலேயே அதிகமாக இந்நோய் பரவுகிறது.

வதிவிட வசதிகள் அற்ற நிலையில் மக்கள் செறிந்து வாழும் நகரப்புற சேரிப் பகுதிகளில் இந்த நோய் சுலபமாகத் தொற்றக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

இந்நோய் 5 தொடக்கம் 15 வயது பாடசாலை மாணவரையே அதிகமாகப் பாதிக்கிறது. ஆண்களை விட பெண்களே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

ஒரு தடவை இந்நோயால் பாதிக்கப்பட்டால் திரும்பவும் இதன் தாக்கத்திற்குள்ளாகும் சாத்தியம் கூடுதலாக உண்டு. இதனால் பாதுகாப்புச் சிகிச்சை முக்கியமாகிறது. ஏனெனில், தொடர்ந்து வரும் தாக்கங்களினால் இருதயப் பாதிப்பு ஏற்பட்டு ஆயுள் குறைய இடமுண்டு.

முதன்முறை தாக்கத்துடன் வரும் நோயாளர்களில் கணிசமானவர்கள் இருதயப்பாதிப்புடன் வருவதால் இந்நோய் ஏற்படாமல் தடுப்பதும் இறந்ததும் முக்கியமானதுமாகும்.

குடாநாட்டுப்பகுதியில் இந்நோய் ஏற்படுகின்றவர்களில் 60 சதவீதத்துக்கு மேற்பட்டோர் 5 வயதுக்கும், 15 வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் ஆவர்.

இவர்களுக்கென தனி விசேட சிகிச்சைப் பிரிவு வைத்தியசாலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இவர்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டி இருப்பதால் 12 வயதுக்கு மேற்பட்டோர் வயது வந்தவர்களின் சிகிச்சை நிலையத்திற்கு மாற்றப்படுகிறார்கள்.

சிகிச்சை நிலையத்துக்கு வருவோரை அவதானிக்கும் போது 12 வயதிற்கு உட்பட்டவர்கள் மாதம் சராசரி 140 பேர் சிகிச்சைக்கு வருகிறார்கள்: 12 வயதுக்கு மேற்பட்டோர் மாதம் சராசரி 3000 பேர் சிகிச்சைக்கு வருகிறார்கள். பொதுவாக இவர்கள் நீண்டகாலத்துக்கு சிகிச்சை பெறவேண்டியிருக்கும். குறிப்பாக இருதயப் பாதிப்பு ஏற்பட்டிருப்பின் நீண்ட காலச் சிகிச்சை அவசியமாகிறது.

இந்நோயின் ஆரம்ப அறிகுறியாக தொண்டைப் புண், தொண்டைச் சதையில் வீக்கம் ஏற்படும். தொற்று ஏற்பட்டு ஒன்று முதல் மூன்று கிழமைகளில் வாதசுரம் ஏற்படலாம்.

அநேக சந்தர்ப்பங்களில் சடுதியாக நோய்க் குறிகளைக் காட்டாமல் உடலில் காய்ச்சல் ஏற்படும்; அநேகமாக உடலில் 104 பாகை வரை வெப்பம் கூடிக் காணப்படும்.

சாப்பாட்டில் மனமில்லாமை, நாக்கில் வெள்ளை நிறம் படிதல் ஆகியனவும் ஏற்படும்.

உடலில் பெரிய மூட்டுக்கள் வீக்கமடைந்து நோவு ஏற்படும்.

அனேகமாக பெரிய மூட்டுக்கள் அதாவது முழங்கால், மணிக்கட்டு, கணுக்கால், முழங்கை, தோள் மூட்டு, நாரி மூட்டுக்கள் தாக்கப்படும். சிலவேளைகளில் முதலில் ஒரு மூட்டில் தாக்கம் இருந்து மூன்று, நான்கு நாட்களில் இது மாறி மற்ற மூட்டை தாக்கத் தொடங்கும்.

முக்கிய பாரதூரமான தாக்கமாக இருதயப் பாதிப்பு ஏற்படும் (Rheumatic Carditis) அதிகமாக இருதய வால்வுகளைத் தாக்கத் தொடங்கலாம்

இந்த நோயின் மற்றும் ஓர் அறிகுறியாக தோலின் கீழ் கட்டிகள் ஏற்படும். இக் கட்டிகள் நோவற்றதாகவும், இலகுவில் அசையக் கூடியதாகவும் இருக்கும்.

இவை அனேகமாக தசை முடிவுகளின் எலும்புகளின் மேலும், மூட்டுக்களின் மேற்பகுதியிலும் காணப்படலாம். தோலில் சிவப்பு நிற மாற்றம் (எறித்தீமா மாஜினேற்றம்) பிறைச் சந்திரன் வடிவில் உயர்ந்த கரைகளுடன் ஏற்படலாம். சிறுக்கு மூட்டு நோவு மட்டும் வீக்கமில்லாது காணப்படும்.

மேற்கூறிய நோய்க்குறிகள் எல்லா நோயாளரிலும் காணப்படுவதில்லை. அநேக சந்தர்ப்பங்களில் காய்ச்சலும் மூட்டு வாதமும் ஏற்படும். கணிசமானவர்களில் இவற்றுடன் இருதயப் பாதிப்பும் காணப்படும்.

இந்நோய் வந்தவர்கள் குணமடைந்த பின்பும் மாதமொருமுறை சிகிச்சை நிலையம் செல்ல வேண்டும். திரும்பவும் திரும்பவும் கிருமித் தொற்று ஏற்படாது தடுப்பதற்கு இது உதவும். [இ-18]

உ

நல்லூர் உற்சவகாலச் சிறப்பகம்

## நம்பிக்கை ஒளிவீசும் நால்மூன்று கையே!

நல்லூர்க்கு வருகவென நயந்தழைக்கும் ஒரு கை
நண்ணியவருக் கருணைச் சொரிந்து நிற்கும் ஒரு கை
தொல்லை வினைத் துயரங்கள் தீர்த்துவிடும் ஒரு கை
தெய்வானை திருந்தோளைத் தழுவிவரும் ஒரு கை
வள்ளியம்மையை வலத்தில் வாழ வைக்கும் ஒரு கை
வரம் கோரும் அடியவர்க்கு அவை வழங்கும் ஒரு கை
அறியாமை எனும் இருளை அழித்தொழிக்கும் ஒரு கை
ஆன்மீக அறிவொளியைத் தூண்டி வரும் ஒரு கை
சேவலினைக் கொடியில் வைத்துச் செகம் புரக்கும் ஒரு கை
சிங்கார வேலைக் கொண்டு இறுமை ஒழித்திடும் கை
நாமிருக்கப் பயமேதும் இல்லையெனும் ஒரு கை
நான் வேதம் சொல்லும் அறம் வெல்லும் எனும் ஒரு கை
நம்பிக்கை ஒளிவீசும் நால் மூன்று கையே
நல்லை முருகையன் தனை நமக்குணர்த்தும் கையே;

- சிற்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட-கிழக்கு விவசாயிகளுக்கு ரூ. 52 கோடி 50லட்சம் கடன்

## ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும்

கொழும்பு, ஆக. 27
வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண விவசாயிகளுக்கு இந்த ஆண்டு இறுதிகுள் 52 கோடி 50 லட்சம் ரூபா கடனாக வழங்கப்படவுள்ளது.

இப்பணத்தை விசேட நிதி உதவியாக ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியிருப்பதாக விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சித்துறை அமைச்சர் தர்மதாஸ பண்டா விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் விசேட கூட்டத்தில் தெரிவித்தார்:

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளே இந்த நிதி உதவித் திட்டத்தின் கீழ் கடன்பெறத் தகுதியுடையவர்கள்.

டிராக்டர் மற்றும் விவசாய உபகரணங்களை வாங்குவதற்காக ஒரு விவசாயி 9 சதவீத வட்டியில் இரண்டு லட்சம் ரூபா கடன் பெற முடியும் என்றும் —

விவசாய தொழில் நிறுவனங்களை ஆரம்பிப்போர் 12 சதவீத வட்டியில் மட்டுப்படுத்தப்படாத தேவையான கடனைப் பெறமுடியும் என்றும் —

இரண்டு வங்கிகள் மூலம் இக்கடன் வழங்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது

(இ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அப்புக்குட்டி மாணிக்கம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்புக் குட்டி மாணிக்கம் 26 08-92 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற அப்புக்குட்டியின் அன்பு மனைவியும், குணர ணம் [ஓய்வுபெற்ற மின் சார ஊழியர்], காலஞ்சென்ற இராசையா சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்], கந்தசாமி [கொழும்பு லங்கா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்] ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியம், நேசம்மா, இராஜேஸ்வரி] ஆகியோரின் அன்பு மாமியாரும், வேல்சிவானந்தன் B. A. [ஆசிரியர்], காலஞ்சென்ற திருமதி அன்னலிங்கம் புஸ்பராணி, அருளானந்தன் [கொழும்பு ராஜன் அச்சகம்]. திருமதி பேரின்பராஜா ரவிராணி [சுவிஸ்], செல்வநந்தன் [சுவிஸ்], உதயராணி லலிதாராணி, திருமதி சுந்தரலிங்கம், சரோஜினி [கொழும்பு]. லீலா [கொழும்பு]. இராஜகுமார் [சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்], ஜெயக்குமார் [பிரான்ஸ்] சியாமினி சுதர்ஷினி. கருணாகரன், ராஜகருணா. சந்திரகருணா, டேவிகா. வேணுகா [கொழும்பு] ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [27-08-92] வியாழக்கிழமை மாலை 4-00 மணியளவில் வீரசிங்கம் மதவடிவேன், சுதுமலை வடக்கு, மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யபடும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. குணரத்தினம் (மகன்)

தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.
[4951]

### நடராசா விக்னேஸ்வரராசா

நடராசா விக்னேஸ்வரராசா 25-8-92 இல் அகால மரணமானார். இவர் நடராசா [காலஞ்சென்ற தபால் ஊழியர்] - கமலாதேவி [சாமியம்மா] ஆகியோரின் அன்பு மகனாவார்.

அன்னாரின் பூதவுடல் 27-8-92 [இன்று] முற்பகல் 11 மணியளவில் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

தகவல்:
வே. கந்தசாமி [மைத்துனர்]

ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலயம்,
111/A, கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
[22321]

### நாகலிங்கம் தம்பிராசா

முன்னாள் மல்லாகம் மாவட்ட நீதிமன்று ஓய்வு பெற்ற உத்தியோகத்தரும், மல்லாகம் நீதிமன்ற ஒழுங்கையைச் சேர்ந்தவருமான நாகலிங்கம் தம்பிராசா அவர்கள் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், திருமதி. இ. ஜெயந்திமலர் [சந்திரா]. திரு த. சுகுமாரன் (கனடா], திரு. த சிவகுமாரன் (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும். திரு. ச இராசநாயகம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் பிரதேச சபை, பூநகரி]. திருமதி. ஞானேஸ்வரி (கனடா], திருமதி உஷாமாலா [கனடா]. ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு நா. நடராசா (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்], காலஞ்சென்ற திரு. நா செல்வத்துரை. திருமதி வை. செல்லம்மா. செல்வி. நா. நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராதிகா, இரஜீவன், கார்த்திகா, துளசி [கனடா], ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [27 - 8 - 92] காலை 10 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி. இ. ஜெயந்திமலர் [சந்திரா] [மகள்]

கைலாய வைரவ கோவிலடி,
நீதிமன்ற ஒழுங்கை,
மல்லாகம்.
[4952]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக. 27
பத்தமேனி தீர்த்தாங்குளம் பிள்ளையார் கோவிலின் தீர்த்தோற்சவம் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 27
தொல்புரம். கொட்டியம்பதி ஆதிமுத்துமாரி அம்பாள் ஆவணிப்பூர உற்சவம் நாளை மாலை விசேட ஆராதனையுடன் ஆரம்பமாகி நடைபெறும். (உ)

★ ★ ★

யாழ். குருநகர் புனித ஆரோக்கிய நாதர் திருநாள் இன்று நடைபெறும். காலை 6. 30 மணிக்கு திருநாள் திருப்பலி விருந்தும். அதனைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப சுற்றுப் பிரகார பவனியும் இடம்பெறும். (த)

## ● 40 ஆயிரம்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)
திருமண ஒப்பந்தங்களைச் செய்து கொண்டனர்.

கொரியாவைச் சேர்ந்த கிறிஸ்தவ போதகரான சன்-மியாங் - மூன் என்பவரால் இத்திருமணங்கள் நிறைவேற்றி வைக்கப்பட்டன.

1988 ஆம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்ற சோல் விளையாட்டரங்கில் இவ்வைபவம் இடம்பெற்றது.

இத் திருமணங்களை நிறைவேற்றி வைத்த கிறிஸ்தவ போதகரான சன் - மியாங்-மூன் தம்மை இரண்டாவது கிறிஸ்துநாதர் என்று பிரசாரம் செய்து வருபவர்.

முன்னர் வட கொரியாவில் இவர் இருந்த சமயம் இப்படியான பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது வட. கொரிய அரசாங்கத்தினால் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

[இ-10]

## சுவர் இடிந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்கனவே ஷெல்லின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டிருந்த இந்தச் சுவர் இடிந்து விழுந்த சமயம் சுவரின் மீது பலர் ஏறி இருந்து தேர்ப் பவனியைப் பார்த்துக்கொண்டிருந்தனர் என்றும் —

சனசமுத்திரம் சுவரில் மோதியபோது சுவர் இடிந்து விழுந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

சிவராசா சிவசோதனா [வயது 10] நல்லூர், முருகதாஸ் ஹரிதாஸ் [வயது 13] யாழ்ப்பாணம், செல்வரட்ணம் ஜெகந்தநி [வயது 14] நல்லூர், யோகேஸ்வரன் ஹிமாலன் [வயது 8] கல்வியங்காடு, பொன்னுத்துரை காந்தரூபன் [வயது 22] ஆனைக்கோட்டை, தனபாலசிங்கம் இளங்கோவன் [வயது 19] உரும்பராய், செல்லத்துரை பாலேந்திரன் [வயது 34] யாழ்ப்பாணம், மனோகரன் நகுலேஸ்வரி [வயது 43] யாழ்ப்பாணம், சு. பாஸ்கரன் [வயது 45] யாழ்ப்பாணம், பொன்னுத்துரை சிவபாதம் [வயது 45] காரைநகர்.

மற்றும் பலர் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுச் சென்றனர்.

அதேசமயம் மின் ஒழுக்குக் காரணமாக நேற்று கோயிலுக்குள் சிறிய தீவிபத்து சம்பவம் ஒன்றும் இடம்பெற்றிருந்தது.

[இ-10]

### உதயன் ஆதரவுடன் நடந்த

## சைவ சமயப் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம்

நல்லைக் கந்தன் திருவிழாவை முன்னிட்டு, உதயன் ஆதரவுடன் இந்து சமயப் பேரவை நடத்திய சைவ சமய வினா விடைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு நேற்றுக் காலை நல்லை ஆதீனத்தில் நடந்த விழாவில் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பரிசு பெற்றோர் விவரம் வருமாறு:-

முதற் பரிசு:
செல்வி மிதிலா தியாகராசா, பதிமகிரி, தலையாழி, கொக்குவில்.

இரண்டாம் பரிசு:
செல்வன் வ. பிரபாகரன், மே/பா. திருமதி ப. அப்புத்துரை, இல. 5 பிரதான வீதி, அளவெட்டி.

மூன்றாம் பரிசு:
செல்வன். ஜெயராசா ஜெபகாந்தன், பாரதி இல்லம், புகையிரத வீதி, கொக்குவில்.

ஆறுதல் பரிசுகள்:
★ செல்வி செ. நித்தியகலா, 17/7, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
★ செல்வன். சிவநேசன் திருவனந்தன், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.
★ செல்வி விஜயா நீலகண்ட சர்மா, கணேசுவரம், அளவெட்டி.
★ செல்வி வி. டப்தி, மே/பா. திருமதி ஞா. மனோகரன், திருவேங்கடம், நீதிமன்ற வீதி, மல்லாகம்.
★ செல்வி தி. பானுமதி, கும்பழாவளை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

நேற்றைய விழாவில் பரிசில்களை பெற வராதவர்கள் இம் மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லை ஆதீனத்தில் உள்ள இந்துப் பேரவை அலுவலகத்தில் உரிய அத்தாட்சிகளைக் காட்டி பரிசுகளைப் பெறலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (அ)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 27
மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு :-

★ அரியாலை ஐக்கிய வி. க. அணி எதிர் கலைவாணி வி. க. அணி

★ சென் மேரிஸ் 'ஏ' அணி எதிர் பாடுமீன் சிவப்பு அணி. [உ]

## ஹமில்டன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நடத்தினார் என்று மட்டும் தெரியவந்தது.

'ஒப்பரேஷன் பூமியதிர்ச்சி' நடவடிக்கையின் போது விடுவிக்கப்பட்ட பகுதிகளையும் ஹமில்டன் குழுவினர் நேற்றுப் பார்வையிட்டனர்.

## பஞ்சாப்பில் இரவு நேர ஆதிக்க ஒப்பரேஷன்

பஞ்சாப் மாநிலத்தில் இரவு நேரத்தில் சீக்கியத் தீவிரவாதிகள் பொதுமக்களைத் தாக்கி வருவதை நிறுத்து முகமாக பாதுகாப்புப் படையினர் 'இரவு நேர ஆதிக்க ஒப்பரேஷன்' என்ற பெயரில் பாதுகாப்பு நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையில் 25 ஆயிரம் பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும்—

இந்த நடவடிக்கை வெற்றி அளிக்கும் பட்சத்தில் சீக்கியத் தீவிரவாதிகளின் இரவு நேர நடமாட்டம் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டு விடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் வினாசித்தம்பி

(இளைப்பாறிய அதிபர் - காரைநகர் களபூமி சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம், மானிப்பாய் மகளிர் கல்லூரி, காரைநகர் யாழ்ற்றன், கனிஷ்ட பிரிவு)

வாரிவளவு காரைநகரைச் சேர்ந்த கதிரவேலு இலக்சுமி தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரி திருமதி பாக்கியம் வினாசித்தம்பி 26 - 08 - 92 அன்று காலமானார்.

இவர் காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் க. வினாசித்தம்பியின் மனைவியும், வி. செல்வரெத்தினம் [உதவித் தபாலதிபர் - யாழ்ப்பாணம்], வைத்திய கலாநிதி சாரதாதேவி இராசநாதன் [மகப்பேற்று குடும்பத்திட்ட ஆலோசகர், அக்லாண்ட், நியூஸிலாந்து]. சாவித்திரிதேவி [ஆசிரியை, நாவலர் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்], சிவமணிதேவி [ஆசிரியை றொஸ்மினி கல்லூரி, அக்லாண்ட், நியூஸிலாந்து], வைத்தியக் கலாநிதி சறோஜினிதேவி இரத்தினகுமார் [மயக்க மருந்து நிபுணர், இங்கிலாந்து]. பத்மநாதன் [விற்பனை முகவர். ஜேசப் அன்ட் கொம்பனி அக்லாண்ட், நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் —

பத்மதேவி செல்வரத்தினம் [ஆசிரியை வேம்படி மகளிர் கல்லூரி], வைத்திய கலாநிதி மகேசன் இராசநாதன் [பொது மருத்துவ நிபுணர். அக்லண்ட், நியூசிலாந்து], வைத்திய கலாநிதி கந்தையா இரட்ணகுமார், [சத்திர சிகிச்சை நிபுணர், நியூ பவுண்ட்லாந்து, கனடா] சாரதாதேவி பத்மநாதன் [கணனி உத்தியோகத்தர், எய்டஸ் றிசேர்ச் யூனிட் அக்லாந்து, நியூசிலாந்து] ஆகியோரின் அன்பு மாமியாரும்-

தமயந்தி [மருத்துவபீட மாணவி, நியூஸிலாந்து] குமணன் [மருத்துவபீட மாணவன், அக்லாந்து பல்கலைக்கழகம், நியூசிலாந்து]. கல்யாணி [இந்து மகளிர் கல்லூரி], ஸ்ரீஸ்காந்தன் [மாணவன், இங்கிலாந்து], காஞ்சனா [வேம்படி மகளிர் கல்லூரி], சுகந்தன், வசந்தன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல. 58, பிறவுண் வீதி, நீராவியடியில் உள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் இன்று பிற்பகல் 2மணியளவில் நடைபெற்று. பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
வி. செல்வரட்ணம் (மகன்)

58 பிறவுண் றோட்,
நீராவியடி.
(22322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org